# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 – 2023

# எழுதுபொருள் மற்றும் அச்சு

## மானியக் கோரிக்கை எண். 30


**மு.பெ. சாமிநாதன்**

செய்தித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# <u>பொருளடக்கம்</u>


| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | உருவாக்கமும், எழுச்சியும் | 2 |
| 2 | துறையின் நோக்கம் | 2-3 |
| 3 | துறைசார் அலகுகள் அமைந்துள்ள இடங்கள் | 4-5 |
| 4 | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை – ஒரு பார்வை | 6-36 |
| 5 | அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் | 36-39 |
| 6 | பெயர் மாற்றம் | 40-41 |
| 7 | அரசு அச்சகங்களில் 2021-2022-ஆம் ஆண்டில் அரசுத்துறைகளுக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட பணிகள் | 42-52 |
| 8 | தொழிலாளர்களின் நலன் | 53-61 |
| 9 | பணி நியமனங்கள் | 61-62 |
| 10 | வரவு – செலவு | 63 |
| 11 | கட்டட பராமரிப்பு | 64 |
| 12 | கழித்தொதுக்கம் | 64-65 |

| வ. எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 13 | தகவல் பரவலாக்கம் | 65–66 |
| 14 | நிறைவுரை | 66–67 |
| 15 | இணைப்பு "அ" மற்றும் "ஆ" | 68–71 |

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# எழுதுபொருள் மற்றும் அச்சு

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2022–2023

**"நவீன உலகின் வலிமை மிகு ஆயுதம் அச்சகம்"**

**முன்னுரை**

மனித சமுதாய வளர்ச்சியின் மிக முக்கியமான கண்டுப்பிடிப்பும், உலக வரலாற்றில், மத, அரசியல், அறிவியல், சமுதாய மற்றும் கலாச்சார புரட்சிகளுக்கும், எல்லைகளை கடந்த கருத்து பரிமாற்றத்திற்கும் காரணமான அச்சகம், அதிவீரியமிக்க வெடிமருந்துகளைக் கொண்ட ஆயுதக் கிடங்கைக் காட்டிலும் வலிமைமிகு ஆயுதமாகும். தகவல் சகாப்தத்தில் சிறு பொறியாய் உருவாகி இன்று வரை அறிவு பரிமாற்றத்தில் மிகப் பெரிய பங்காற்றும் அச்சகம் நிர்வாகத்திற்கும்

மக்களுக்குமிடையேயான பாலமாகும். அன்றைய இந்தியாவின், அரசு முதன்மை அச்சகங்கள் அனைத்திற்கும் ஓர் நடைமுறையினை முதன்முதலாய் உருவாக்கிக் கொடுத்த பெருமைமிகு அச்சகம், சென்னை மைய அச்சகமாகும்.

## 1. <u>உருவாக்கமும், எழுச்சியும்</u>

1831–ஆம் ஆண்டு, அன்றைய சென்னை மாகாணத்தின் ஆட்சி பீடமான புனித ஜார்ஜ் கோட்டையில், திசம்பர் திங்கள் 17–ஆம் நாள், ஆவணப்படுத்துதலின் அவசியம் உணர்ந்து, அதனின் ஓர் அங்கமாய் சிறிய அச்சகம் ஒன்று துவங்கப்பட்டது. இதில் 10 பணியாளர்களைக் கொண்டு மிக எளிய முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறான எளிய துவக்கம், எழுதுபொருள் அச்சுத்துறையாக வளர்ந்து 190 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

## 2. <u>துறையின் நோக்கம்</u>

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் தேவைகளை, ஓர் மைய அச்சகம், 6 கிளை அச்சகங்கள் மற்றும் ஓர் எழுதுபொருள் அலுவலகம் மூலம் செவ்வனே நிறைவு செய்வதே இத்துறையின் நோக்கமாகும். இவை தவிர, தற்போது அச்சுக்கட்டணத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகத் தேர்விற்கான விடைத்தாள்கள், அரசுசார் நிறுவனங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் நீதித்துறை மூலம் வெளியிடப்படும் நூல்கள் ஆகியவற்றை அச்சிட்டு தரும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. தொழில்நுட்பங்கள் ஏற்றமிகு இக்காலகட்டத்தில், காலநிலைக்கேற்ப நவீன தொழில்நுட்பத்தில், துரிதமாகவும், செவ்வையாகவும் அச்சிடும் வகையில், அச்சகத்தின் தரம் உயர்த்தும் முயற்சியும் மற்றும் 190 ஆண்டுகள் பழமைவாய்ந்த அச்சுத்துறை வரலாற்றினை ஆவணப்படுத்தும் முயற்சியும் நடவடிக்கையில் உள்ளன.

## 3. துறைசார் அலகுகளின் அமைவிடங்கள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் நிர்வாக அமைப்பில் அரசு மைய அச்சகம், 6 அரசு கிளை அச்சகங்கள் மற்றும் ஓர் எழுதுபொருள் அலுவலகம் ஆகியவை இயங்கி வருகின்றன.

| வ. எண். | அலகு | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1. | எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம் | 110, அண்ணாசாலை, சென்னை– 600 002. |
| 2. | அரசு மைய அச்சகம் | தங்க சாலை, வள்ளலார் நகர், சென்னை– 600 001. |
| 3. | அரசு கிளை அச்சகம் | பொது அலுவலக வளாகம், சத்தியமூர்த்தி சாலை, புதுக்கோட்டை– 622 001. |

| வ. எண். | அலகு | அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 4. | அரசு கிளை அச்சகம் | உளுந்தூர்பேட்டை மெயின் ரோடு, விருத்தாசலம்–606 002. |
| 5. | அரசு கிளை அச்சகம் | பிளாட் எண்.சி–9, துவாக்குடி, திருச்சிராப்பள்ளி–620 015. |
| 6. | அரசு கிளை அச்சகம் | ஐந்து ரோடு, சிட்கோ வளாகம், சேலம்–636 004. |
| 7. | அரசு கிளை அச்சகம் | ரேஸ் கோர்ஸ் சாலை, கோ.புதூர், மதுரை–625 007. |
| 8. | அரசு கிளை அச்சகம் | சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகம், மதுரை–625 023. |
| 9. | அரசு எழுதுபொருள் அலுவலகம் | 64, இராஜாஜி சாலை, சென்னை–600 001. |
| 10. | **அரசு கிளை அச்சகம் | உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–600 104. |

** அரசு கிளை அச்சகம் சென்னை உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–104–இல், வழக்குப்பட்டியல் அச்சிடும் பணி நிறுத்தப்பட்டதாலும், இடப்பற்றாக்குறை காரணமாக உத்தேசிக்கப்பட்ட நீதிமன்ற வளாக விரிவாக்கத்திற்காகவும், அச்சக வளாகத்தினை நீதித்துறை வசம் ஒப்படைக்க கோரியதன் அடிப்படையில், இக்கிளை அச்சகப் பணிகள் தற்போது நிறுத்தப்பட்டு, வளாகத்தை காலி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 4. <u>எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஒரு பார்வை</u>

### அ) <u>நிருவாக அமைப்பு</u>

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் துறைத்தலைவர் ஆணையர் ஆவார். மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஓர் இணை இயக்குநர் பொது நிருவாகப் பணிகளையும், அச்சுப்பொறியியல் துறையில் பட்டம் பெற்ற துறை சார்ந்த பொது மேலாளர், தொழில்நுட்ப பணிகளையும்

மேற்கொள்வதோடு, அன்றாட பணிகள் மற்றும் கொள்கை ரீதியான முடிவுகள் எடுப்பதில் ஆணையருக்கு உதவுவதும் இவர்களது கடமையாகும். வரவு செலவு, கணக்கு மற்றும் தணிக்கை பிரிவினை கண்காணிக்க முதன்மை கணக்கு அலுவலர் ஒருவர் மற்றும் அச்சுக்கட்டணம் நிர்ணயம் மற்றும் தளவாடங்களை மதிப்பீடு செய்வதற்கு கணக்கு அலுவலர் ஒருவர் கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்தும், தொழிலாளர் நலன்களை கண்காணிக்க ஓர் உதவி ஆணையர், தொழிலாளர் நல அலுவலராகவும், உதவித் தொழிலாளர் நல அலுவலராக தொழிலாளர் துணை ஆய்வாளர் ஒருவரும் தொழிலாளர் நலத் துறையிலிருந்தும் மாற்றுப்பணியில், ஆணையரகத்தில் பணிபுரிந்து வருகின்றனர்.

## ஆ. <u>பணியாளர்கள்</u>

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் ஒப்பளிக்கப்பட்ட 4870 பணியிடங்களில் தற்போது 579 பெண் மற்றும் 1046 ஆண் பணியாளர்கள்

என 1625 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். இப்பணியாளர்களில் 243 பணியாளர்கள் மாற்றுத் திறனாளிகள் ஆவர்.

அரசின் கொள்கையான அனைவரையும் உள்ளடக்கிய சமுதாய வளர்ச்சி என்பதன் ஓர் அங்கமாக மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்களுக்கென பல உதவிகள் மட்டுமல்லாது தன்னம்பிக்கையுடன் வாழ, அரசு நிர்ணயித்துள்ள அரசுப் பணியில் 4 விழுக்காடு ஒதுக்கீட்டிற்கும் மிகையாக 16 சதவீத மாற்றுத் திறனாளிகள் இத்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளது தனிச்சிறப்பாகும்.

| வ. எண் | மாற்றுத் திறனாளிகளின் இனங்கள் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | பார்வைத்திறன் குறைந்தோர் | 131 | 09 | 140 |
| 2. | செவித்திறன் மற்றும் பேசும் திறன் குறைந்தோர் | 05 | 02 | 07 |

| வ. எண் | மாற்றுத் திறனாளிகளின் இனங்கள் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 3. | உடல் குறைபாடுகள் உள்ளோர் | 63 | 32 | 95 |
| 4. | மனநலம் சார்ந்த குறைபாடு உள்ளோர் | 01 | 0 | 01 |
| | **மொத்தம்** | 200 | 43 | 243 |

இதே போல், பிற அரசு துறைகளுடன் ஒப்பிட்டால் எழுதுபொருள் அச்சுத்துறையில் 36 விழுக்காடு பெண் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இதில் அரசு அச்சகங்களில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான தொழில்நுட்ப கல்வித்தகுதி பெற்றுள்ள பெண் பணியாளர்களும் அடங்குவர்.

## இ. <u>எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை அலகுகள்</u>

### 1. <u>ஆணையரகம்</u>

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் தலைமையகம் ஆணையரகமாகும். கீழ்காண்

5 பிரிவுகளில்  208 அலுவலர்கள் / பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

| வ. எண். | பிரிவு | அலுவலர்கள் |
|---|---|---|
| 1. | நிருவாகம் | இணை இயக்குநர் / மாவட்ட வருவாய் அலுவலர்–1, உதவி இயக்குநர் நிலையில் ஆணையரின் நேர்முக உதவியாளர்–1, உதவி இயக்குநர்கள்–2 |
| 2. | தொழில்நுட்பம் | பொது மேலாளர்–1, மேலாண்மைக் குறிக்கோள் ஆலோசகர்–1, துணைப் பணிமேலாளர்கள்–2 மற்றும் உதவிப்பணிமேலாளர் / தனி அலுவலர் படிவங்கள்–1 |
| 3. | வெளியீடுகள் | துணை இயக்குநர் (வெளியீடுகள்)–1 |
| 4. | தொழிலாளர் நலன் | தொழிலாளர் உதவி ஆணையர் நிலையில் தொழிலாளர் நல அலுவலர்–1, தொழிலாளர் துணை ஆய்வாளர் நிலையில் உதவித் தொழிலாளர் நல அலுவலர்–1, |
| 5. | கணக்கு மற்றும் தணிக்கை | முதன்மைக் கணக்கு அலுவலர்–1 கணக்கு அலுவலர்–1 |

**<u>ஆணையரகத்தின் பணிகள்</u>**

(i) இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அச்சகங்களுக்கு காலத்திற்கேற்ப நவீன இயந்திரங்கள், உதிரிபாகங்கள், அச்சு பணிகளுக்கு தேவையான பல்வகை காகிதங்கள், அட்டைகள், அச்சு பயன்பாட்டு பொருட்கள், அலுவலக பயன்பாட்டு இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்து அரசு அச்சகங்களுக்கு வழங்குதல்.

(ii) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு துறைகள்/அரசு அலுவலகங்களுக்கு தேவையான காகித இனங்கள், அச்சுப் பணிக்கு தேவையான காகித இனங்களில் 90 சதவீதம், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் மூலமாகவும், சிறப்புவகை காகிதங்கள் மற்றும் அட்டைகள், தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா

திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாகவும் கொள்முதல் செய்தல்.

(iii) அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களுக்கு அச்சுப்பணிகளை ஒதுக்கீடு செய்து அதன் செயலாக்கத்தினை கண்காணித்தல்.

(iv) வழக்கமாக அரசுத் துறைகளால் பயன்படுத்தப்படும் படிவங்கள், பதிவேடுகள், விதித்திரட்டுகள் தவிர, தமிழ் பல்கலைக்கழகம், தொல்லியல் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை வெளியிடும் நூல்களுக்கு அச்சுக்கட்டணம் நிர்ணயித்தல் மற்றும் அச்சிட்டு வழங்குதல், தமிழ் வளர்ச்சித் துறையின் மானியத்துடன் தனியார் அச்சகங்களில் அச்சடிக்கப்பட்ட நூல்களுக்கான அச்சுக் கட்டணத்தை சரிபார்த்தல் மற்றும் விலை நிர்ணயித்தல்.

(v) பெயர் மாற்றம், அரசின் அறிவிக்கைகள், நீதிமன்றங்களால் வெளியிடப்படும் நொடிப்பு மனுக்கள், மைய அரசின் அறிவிக்கைகள் அரசிதழ்களில் வெளியிடுதல் ஆகியவை ஆணையரகத்தின் முக்கியமான பணிகளாகும்.

(vi) இவை தவிர அனைத்து பணியாளர்களின் பணியமைப்பு தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

2. <u>அரசு எழுதுபொருள் கிடங்கு மற்றும் அலுவலகம், சென்னை–1.</u>

அச்சுத்துறைக்குத் தேவையான காகிதங்கள், அச்சு மை ஆகியவற்றை கொள்முதல் செய்து, இருப்பில் வைத்து அரசு அச்சகங்களுக்கும், எழுதுபொருட்கள், தட்டச்சு இயந்திரங்கள், படிப்பெருக்கிகள் மற்றும் எண்ணிடும் இயந்திரங்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து அரசு அலுவலகங்களுக்கும் வழங்க 1831–ஆம் ஆண்டு

முதல், எழுதுபொருள் பிரிவு, சென்னை மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டிலிருந்த எழுதுபொருள் பிரிவும், தனியாக செயல்பட்டு வந்த அச்சுத்துறையும் இணைக்கப்பட்டு, **"எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை"** என 1953–ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

அ) இராஜாஜி சாலை, சென்னை–1–இல் இயங்கும் அரசு எழுதுபொருள் அலுவலகம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுத் துறைகளுக்கும் தேவையான காகிதங்கள், நகல் எடுக்கும் காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றை கொள்முதல் செய்து இருப்பில் வைத்து கட்டணம் ஏதுமின்றி விநியோகம் செய்யும் அலுவலகமாகவும் செயல்படுகிறது. இரு உதவி இயக்குநர்களுடன், அமைச்சு பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என

77 பணியாளர்களுடன் இவ்வலுவலகம் இயங்கி வருகிறது.

ஆ) மேதகு ஆளுநர் அலுவலகம், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு அமைச்சர்களது அலுவலகங்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, தலைமைச் செயலகம், நீதிமன்றங்கள், தமிழ்நாடு லோக் ஆயுக்தா போன்ற நீதித்துறை அலுவலகங்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் உட்பட தமிழகத்தில் உள்ள 3954 அரசு அலுவலகங்களுக்கு தேவையான காகிதங்கள் மற்றும் எழுதுபொருட்கள், அரசு அலுவலகங்களின் ஆண்டு தேவைப்பட்டியலின் அடிப்படையில் கட்டணம் ஏதுமின்றி வழங்கப்படுகிறது.

இ) கட்டணத்தின் அடிப்படையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை உள்ளிட்ட 67 அலுவலகங்களுக்கு

எழுதுபொருட்கள் வழங்கப்படுகின்றன. இவை தவிர, நாடாளுமன்றம், தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை மற்றும் உள்ளாட்சி தேர்தல் காலங்களில் தேர்தல் மற்றும் வாக்கு சாவடிகளுக்கு தேவையான எழுதுபொருட்கள், தேர்தலுக்கென தேவைப்படும் பல்வகைப் பொருட்களை கொள்முதல் செய்து அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகிக்கும் பணியும் எழுதுபொருள் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

ஈ) 2007–ஆம் ஆண்டு வரை, இவ்வலுவலகம் மூலம் எழுதுபொருட்களுடன், தட்டச்சு இயந்திரங்கள், படிப்பெருக்கிகள் மற்றும் எண்ணிடும் சாதனங்களை கொள்முதல் செய்து அரசு உத்தரவின் அடிப்படையில் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கட்டணமின்றி இவ்வலுவலகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது தட்டச்சு இயந்திரங்களுக்கு பதிலாக

கணினி பயன்பாடும், திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டங்கள் மற்றும் விதிகளும் அமலாக்கத்திற்கு வந்த நிலையில், அந்தந்த துறைகளே கணினிகளை கொள்முதல் செய்யும் நடைமுறை உள்ளதால், தற்போது தட்டச்சு இயந்திரங்களோ, அதற்கு பதிலியான கணினிகளோ இத்துறையில், பிற துறைகளுக்காக கொள்முதல் செய்யப்படுவதில்லை.

3. <u>அரசு மைய அச்சகம், சென்னை-1.</u>

அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் முதன்மையான அச்சகமான அரசு மைய அச்சகம் மிக பழமையானது மட்டுமல்லாது பாரம்பரியம் மிக்கதும், பல வரலாற்றுச் சுவடுகளையும் தன்னகத்தே கொண்டதாகும். இவ்வச்சகமானது திசம்பர் திங்கள் 1831-ஆம் ஆண்டு, 10 தொழிலாளர்களுடன் புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் துவங்கப்பட்டது.

அறிவிக்கைகளுக்கான அரசிதழ்களை வெளியிட மட்டுமே துவங்கப்பட்ட சிறிய அச்சகம், அன்றைய அரசு கொள்கைகள் மற்றும் செயலாக்க நிலைகளை, அச்சில் கோர்த்து ஆவணப்படுத்தும் பணி செய்து வந்த நிலையில், காலப்போக்கில் அதிகரித்த அச்சுப்பணிகள் காரணமாக, அச்சகத்தின் சில பிரிவுகள் அதிக இடவசதி கொண்ட தங்கசாலை கட்டடத்திற்கு (மிண்ட் கட்டடம்) 1888–ஆம் ஆண்டில் மாற்றப்பட்டுள்ளது. பின்னர் இங்கிருந்து, அச்சகம் 1912–ஆம் ஆண்டில், தற்போது ஆணையரகம் அமைந்துள்ள வளாகத்தினை அன்றைய நாளில் அரசின் அச்சுப்பணிகளை பெரிதும் நிறைவேற்றிய **லாரன்ஸ் அசைலம் அச்சகம்** என்ற தனியார் அச்சகத்தாரிடம் இருந்து 3 இலட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டு, அங்கு அச்சகம் மாற்றப்பட்டுள்ளது.

அச்சகத்தின் பயன்பாடு அதிகரித்ததனால் இடவசதியின் அவசியம் உணர்ந்து 1935–ஆம் ஆண்டு அச்சகம் மறுசீரமைப்பு செய்யப்பட்டதுடன், சென்னை பெருநகர மாநகராட்சி எல்லையில்,

வள்ளலார் நகரில் உள்ள தற்போது மைய அச்சகம் இயங்கும் தங்கசாலை வளாகத்திற்கு மாற்றப்பட்டு இன்று வரை செயல்பட்டு வருகிறது.

இவ்வச்சகத்தில், அரசிற்கு தேவையான அனைத்து முக்கிய ஆவணங்கள், நினைவுப் பத்திரங்கள், நிதித்துறையின் மந்தண ஆவணங்கள் மற்றும் தேர்தல் தொடர்பான அச்சுப்பணிகள் மேற்கொள்ளப்படுவதால், பாதுகாப்பு மற்றும் விழிப்பு பணிகளுக்காக, காவல் துறையிலிருந்து ஓர் துணை காவல் கண்காணிப்பாளரும், இவ்வச்சகத்தில் தொழிலாளர் நலம் பேண ஓர் தொழிலாளர் துணை ஆய்வாளரும், அச்சக வளாகத்தில் சுத்தம் மற்றும் சுகாதாரம் பேண, பொதுச்சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத் துறையிலிருந்து சுகாதார ஆய்வாளர் ஒருவரும் மாற்றுப்பணியில் பணிபுரிகின்றனர். இவ்வச்சகத்திற்கென ஒப்பளிக்கப்பட்ட நான்கு உதவிப் பொறியாளர் பணியிடங்களில், தற்போது ஒருவர் மட்டுமே மாற்றுப் பணியில் பணிபுரிந்து வருகிறார்.

இவ்வச்சகத்தில், நிருவாகப் பிரிவு, கணக்குப் பிரிவு, தொழில்நுட்பப் பிரிவு, சுகாதாரம் மற்றும் தொழிலாளர் நலப் பிரிவுகள் கீழ்கண்டவாறு செயல்படுகிறது.

| வ. எண் | அலுவலர் | எண்ணிக் கை | பிரிவு |
|---|---|---|---|
| 1. | பணி மேலாளர் – I | 1 | தொழில்நுட்ப பிரிவு |
| 2. | பணி மேலாளர்–II | 1 | |
| 3. | துணைப் பணி மேலாளர்கள் | 4 | |
| 4. | உதவிப் பணி மேலாளர்கள் | 8 | |
| 5. | உதவி இயக்குநர்கள் | 3 | நிர்வாகம் / அமைச்சுப் பிரிவு |
| 6. | உதவிப் பொறியாளர் கள் | 1 | இயந்திரங்கள் மற்றும் கட்டடங்கள் பராமரிப்பு |

| வ. எண் | அலுவலர் | எண்ணிக்கை | பிரிவு |
|---|---|---|---|
| 7. | காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் | 1 | பாதுகாப்பு |
| 8. | உதவிக் கணக்கு அலுவலர் | 1 | வரவு – செலவு மற்றும் கணக்கு |
| 9. | உதவித் தொழிலாளர் நல அலுவலர் | 1 | தொழிலாளர் நலன் |
| 10. | சுகாதார ஆய்வாளர் | 1 | சுகாதாரம் |

ஆ) அரசிடமிருந்து பெறப்படும் அனைத்து விதமான கமுக்கப் பணிகளை மிகுந்த பாதுகாப்புடனும், இரகசிய தன்மையுடனும், அச்சிட்டு வழங்கிட அரசு மைய அச்சகத்தில் உள்ள வரவு–செலவு மற்றும் அதிரகசிய பிரிவுகள் ஞாயிற்றுக் கிழமை உட்பட வாரம் முழுவதும் இயங்கி வருகின்றன.

இ) **2006–ஆம் ஆண்டு அரசு அச்சகத்தை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு வித்திடப்பட்டு,** 2007–2008–ஆம் நிதியாண்டு முதல் தனியார் அச்சகங்களுக்கு நிகரான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்படுகின்றன.

ஈ) அரசின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த வரவு–செலவு நிதிநிலை அறிக்கை, அனைத்து துறைகளுக்கான மானியக் கோரிக்கை, கொள்கை விளக்கக் குறிப்புகள், பல்கலைக்கழக தேர்வுகளுக்கான விடைத்தாட்கள், 10–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை அரசுத் தேர்வுத் துறையின் விடைத்தாட்கள், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குத் தேவையான காகிதத்தாள் கற்றை (letter pad), நாட்காட்டிகள் மற்றும் நாட்குறிப்பேடுகள் ஆகியவை நவீன அச்சு இயந்திரங்களை கொண்டு குறித்த நேரத்தில் அச்சிட்டு வழங்கப்படுகிறது.

உ) அரசு மைய அச்சகத்தில் அச்சுப் பணிகளின்போது ஏற்படும் காகித கழிவுகளை ஒழுங்குபடுத்த ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) மதிப்பில் காகிதம் சிப்பம் கட்டும் இயந்திரம் (Paper Baling Machine) 2021-2022-ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ஊ) அச்சுப்பணி மேற்கொள்ளும் போது அரசு அச்சகங்களில் கழிவுத்தாட்களால் தீவிபத்து ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் மூலம் காகிதக்கழிவுகள் அவ்வப்போது அகற்றப்படுகிறது. இந்த ஆண்டு உலோகக் கழிவுகளை, உலோகக்கழிவுகள் வர்த்தக நிறுவனம் (M/s.Metal Scrap Trade Corporation, Chennai) மூலம் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எ) தற்போது அச்சகத்தின் சில செயலாக்கப் பிரிவுகளும், நிருவாகப் பிரிவும் ரூ.21.17 கோடி மதிப்பில் நவீன வசதிகளுடன், 1,25,000 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளங்களுடன் 2017–ஆம் ஆண்டு கட்டப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

ஏ) அரசு மைய அச்சகத்தில் அச்சடிக்கப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், அரசிதழ்கள் மற்றும் நாட்காட்டிகள் ஆகியவற்றை சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு உரிய காலத்தில் அனுப்பி வைக்கவும், அரசு ஆவணங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், 2021–2022–ஆம் நிதியாண்டில், முதன்முதலாக இத்துறைக்கென ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) மதிப்பில் சுமையூர்தி (பதிவெண்.TN01 G 8902) ஒன்று கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## ஐ) முன்னுரிமை அடிப்படையில் அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படும் முக்கிய இனங்கள்

| வ. எண். | முன்னுரிமைப் பணிகள் |
|---|---|
| 1 | மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை |
| 2 | மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை |
| 3 | மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் நிதிநிலை அறிக்கை குறித்த உரை |
| 4 | விரிவான மானியக் கோரிக்கை மற்றும் வரவு–செலவு ஆவணங்கள் |
| 5 | அனைத்து அரசுத் துறைகளுக்கான கொள்கை விளக்க குறிப்பு மற்றும் செயல்முறைத் திட்டம் |
| 6 | அதிரகசியப் பணிகள் |
| 7 | பல்வேறு சட்டமன்ற குழுக்களின் அறிக்கைகள் |
| 8 | தமிழ்நாடு அரசிதழ்கள் |
| 9 | பொதுத்தேர்தல் தொடர்பான அறிவிக்கைகள், படிவங்கள், புத்தகங்கள், கையேடுகள், சிறப்பு அட்டைகள், பல்வேறு அளவிலான உறைகள், வாக்குச்சீட்டுகள், பொதுமக்களுக்கான வெளியீடுகள் மற்றும் படிவங்கள் |

| வ. எண். | முன்னுரிமைப் பணிகள் |
|---|---|
| 10 | தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் படிவங்கள், அறிவிக்கைகள் மற்றும் வாக்குச்சீட்டுகள் |
| 11 | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதங்கள் |
| 12 | சட்ட விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள் |
| 13 | தமிழ்நாடு மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள் |
| 14 | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள் மற்றும் பல வண்ண ஆண்டு அறிக்கைகள் |
| 15 | வணிகவரித் துறைப் படிவங்கள் |
| 16 | கருவூலத்துறை படிவங்கள் மற்றும் பதிவேடுகள் |
| 17 | அரசு தொழில்நுட்ப கல்வித் துறை மற்றும் அரசுத் தேர்வுகள் துறை நடத்தும் தேர்வுகளுக்கான விடைத்தாட்கள் மற்றும் துணி வேய்ந்த உறைகள் |
| 18 | நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் |
| 19 | காலமுறை வெளியீடுகள் |

| வ. எண். | முன்னுரிமைப் பணிகள் |
|---|---|
| 20 | மக்கள் நல்வாழ்வு, சமூக நலம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைகளுக்கான படிவங்கள் |
| 21 | பல்கலைக்கழகங்களுக்கான விடைத்தாட்கள் |
| 22 | சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கான பலவகை புத்தகங்கள் |
| 23 | இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறைக்கு தேவையான புற நோயாளிக்களுக்கான அட்டைகள் மற்றும் மருத்துவ புத்தகங்கள் |

4) **<u>உயர்நீதிமன்ற வளாக அரசு கிளை அச்சகம், சென்னை-104.</u>**

1923-ஆம் ஆண்டு, சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்குப்பட்டியல்கள் அச்சிடவும் மற்றும் பிற அச்சுத் தேவைகளை பூர்த்தி செய்யவும், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நிறுவப்பட்ட இக்கிளை அச்சகம், உதவிப் பணி மேலாளர்

தலைமையின்கீழ், தொழில்நுட்ப பணியாளர்கள் உட்பட 65 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

வழக்கு பட்டியல்கள் அச்சிட்டு வழங்குவது 02.01.2020 முதல் நிறுத்தப்பட்ட போதிலும், உயர்நீதிமன்றம் மற்றும் இதர நீதிமன்றங்களுக்கு தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சடித்தல் மற்றும் சில அவசர பணிகள் தொடர்ந்து இவ்வச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. நீதிமன்ற விரிவாக்கத்தின் காரணமாக தற்போது இவ்வச்சகத்தின் இயந்திரங்கள் அரசு மைய அச்சகம் மற்றும் 5 கிளை அச்சகங்களுக்கு மாற்றப்படவுள்ளன. இவ்வச்சகப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களில் பணியமர்த்தப்படுவர்.

இக்கிளை அச்சக கட்டடத்தில் உள்ள அரசு வெளியீடுகள் துணை விற்பனை நிலையத்தில், பணிப்பதிவேடுகள், தமிழ்நாடு அரசிதழ்கள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

## பிற கிளை அச்சகங்கள்

### 5) அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

1883–ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் கீழ் இயங்கி வந்த அச்சகம், 1949–ஆம் ஆண்டு, உதவிப் பணி மேலாளர் ஒருவரை கிளை மேலாளராகக் கொண்டு, 82 பணியாளர்களுடன், அரசு அச்சகமாக செயல்படுகிறது.

இக்கிளை அச்சகத்தில், காவல்துறை, சுற்றுச்சூழல் காலநிலை மற்றும் வனத்துறை, ஓய்வூதியத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆகிய துறைகளுக்குத் தேவையான 290 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டுதோறும் தேவைக்கேற்ப கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

இது தவிர, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இக்கிளை அச்சகத்தில் செயலாக்கப்படுகின்றன.

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் துவங்கப்பட்டது. திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் திட்ட செயலாக்கத்தினை ஆவணப்படுத்துதலின் விளைவாய் நடைமுறைகளுக்காக அச்சக பணி நேரம் 16 மணி நேரமாக உயர்த்தப்பட்டதால், 1959–ஆம் ஆண்டு முதல் இருமுறை பணிமாற்றம் (2shifts) அறிமுகப்படுத்தப்பட்டது.

அச்சுப்பணிகள் அதிகரித்ததன் விளைவாய், அச்சகம் நாளொன்றுக்கு 22 மணி நேரம் பணிபுரியும் நிலை ஏற்பட்டது. அதிக பணிச்சுமை, காலதாமதம் மற்றும் செலவினத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் 1959 முதல் 1976–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் திருச்சி, சேலம், விருத்தாச்சலம்

மற்றும் மதுரையில் கிளை அச்சகங்கள் துவங்கப்பட்டுள்ளன.

6) <u>**அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.**</u>

1961–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், 1981–ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் துணைப் பணி மேலாளர் ஒருவர் தலைமையில், உதவிப் பணி மேலாளர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 91 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, பொதுப் பணித் துறை, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தொழில் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை ஆகிய துறைகளுக்கு தேவையான 369 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு

ஆண்டுத் தேவைப்பட்டியல் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

மேலும் கடலூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் இங்கு அச்சிடப்படுகின்றன.

7) **<u>அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.</u>**

1965–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இருபதாம் நாள், திருச்சிராப்பள்ளி அரியமங்கலம் தொழிற்பேட்டையில் துவங்கப்பட்ட அரசு கிளை அச்சகம், 1990–ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில், சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வச்சகத்தின் கிளை மேலாளராக ஓர் உதவிப் பணி மேலாளர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 95 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

இக்கிளை அச்சகத்தில், சிறைத் துறை, காவல் துறை மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களுக்கு தேவையான தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் உட்பட 126 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்பட்டு ஆண்டுதோறும் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இவை தவிர, திருச்சி மாவட்ட நீதிமன்ற தீர்ப்பு அறிக்கைகளும், கரூர், அரியலூர், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்படுகின்றன.

8) **<u>அரசு கிளை அச்சகம், சேலம்,</u>**

இக்கிளை அச்சகம், 1966–ஆம் ஆண்டு சேலம் குகைப்பகுதியில் துவங்கப்பட்டு, பின்னர், ஐந்து சாலையில் உள்ள "சிட்கோ" தொழிற்பேட்டையில் சொந்தக் கட்டடத்தில் 1986–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் ஆறாம் நாள் முதல் செயல்படுகிறது.

இக்கிளை அச்சகம், உதவிப் பணி மேலாளர் தலைமையின்கீழ், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் என 107 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது.

கருவூலம் மற்றும் கணக்கு துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, அரசுத் தேர்வுகள் துறை, அரசுத்துறைகளின் பயன்பாட்டிற்கு தேவைப்படும் 146 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கேற்ப அச்சிட்டு வழங்கப்படுகிறது.

திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

9) <u>அரசு கிளை அச்சகம், கோ.புதூர், மதுரை–7.</u>

1976–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கிளை அச்சகம், மதுரை கோ.புதூரில், சொந்த கட்டடத்தில் துணைப் பணி மேலாளர் ஒருவர் தலைமையின்கீழ், 2 உதவிப் பணி மேலாளர்கள், 1 உதவி இயக்குநர், அமைச்சுப் பணியாளர்கள், தொழில்நுட்பப்

பணியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் என 203 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, காவல்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வணிகவரி மற்றும் பதிவுத்துறைகளுக்குத் தேவையான 211 வகையான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு ஆண்டுதோறும் ஆண்டு தேவைப்பட்டியலின்படி இவ்வச்சகத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

மேலும், தென்காசி, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் மதுரை போன்ற மாவட்டங்களுக்கான மாவட்ட அரசிதழ்களும் அச்சிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்படுகிறது.

10) <u>அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகம், மதுரை–23.</u>

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வளாகத்தில், 2006–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட அரசு கிளை அச்சகத்தில் 22.01.2007 முதல் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளைக்கு தேவையான தினசரி மற்றும் வார வழக்குப் பட்டியல்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகளின் அச்சுப் பணிகள் செயலாக்கம் செய்யப்படுகின்றன. இக்கிளை அச்சகத்தில், துணைப் பணி மேலாளர் தலைமையின்கீழ் அமைச்சுப் பணியாளர்கள், தொழிற்நுட்ப பணியாளர்கள் மற்றும் அடிப்படைப் பணியாளர்கள் உட்பட 29 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

5. (i) <u>அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை–2.</u>

புனித ஜார்ஜ் கோட்டையில் அரசு அச்சகத்தின் ஒரு பகுதியாக, 1831–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட அரசு வெளியீடுகள் நிறுவனம், 1888–ஆம் ஆண்டு அரசு அச்சகத்தின் சில பிரிவுகளுடன் மின்ட் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. 1912–ஆம் ஆண்டு முதல்

மவுண்ட் ரோடில், தற்போது இயங்கி வரும் இடத்தில் செயல்படுகிறது.

அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில், இத்துறையின் மூலம் அச்சடிக்கப்பட்ட அரசு வெளியீடுகள், விதி புத்தகங்கள், நடைமுறை நூல்கள் மற்றும் ஒன்றிய அரசின் சட்டப் புத்தகங்களுடன் அரசு பணியாளர்களுக்கான பணிப்பதிவேடுகளும் விற்பனை செய்யப்படுகின்றன. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமானது துணை இயக்குநரது நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

2021–2022–ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் குறித்த அரசிதழ் வெளியீடுகள் மூலம் ரூ.87,33,335/–ம் (ரூபாய் எண்பத்தேழு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து முன்னூற்று முப்பத்தைந்து), அரசிதழ்கள், அரசு வெளியீடுகள், துறை சார்ந்த புத்தகங்கள் மற்றும் இந்திய அரசியலமைப்பு புத்தகங்கள் ஆகியவற்றை விற்பனை செய்ததன் மூலம் ரூ.5,16,054/–ம் (ரூபாய் ஐந்து இலட்சத்து

பதினாறாயிரத்து ஐம்பத்து நான்கு) அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

(ii) <u>**துணை விற்பனை நிலையங்கள்**</u>

அ) வழக்குரைஞர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொது மக்கள் பயனடையும் வகையில், சென்னை உயர்நீதிமன்ற கிளை அச்சகத்தின் ஒரு பகுதியாக ஒரு துணை வெளியீடு விற்பனை நிலையம் உள்ளது.

ஆ) மத்திய மற்றும் தென்மாவட்டங்களும் உரிய காலத்தில் விரைவாக பயன்பெறும் வகையில், கடந்த 10 ஆண்டுகளாக, திருச்சி மற்றும் மதுரையில் உள்ள கிளை அச்சக வளாகங்களில் துணை விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

2021–2022–ஆம் ஆண்டில் தனியார் அறிவிக்கைகள், பிற அறிவிக்கைகள் மற்றும் விதி புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் திருச்சி துணை விற்பனை நிலையத்தில் ரூ.9,40,628/–ம்

(ரூபாய் ஒன்பது இலட்சத்து நாற்பதாயிரத்து அறுநூற்று இருபத்தெட்டு) மதுரை துணை விற்பனை நிலையம் மூலம் ரூ.10,73,581/-ம் (ரூபாய் பத்து இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்று) மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வளாக துணை விற்பனை நிலையம் மூலம் ரூ.1,31,798/-ம் (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தொன்றாயிரத்து எழுநூற்று தொண்ணூற்றெட்டு) அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவரமைப்பாகவும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் செயல்படுகிறது. மேலும், பெயர் மாற்றம் குறித்த அரசிதழ்கள், பணிப்பதிவேடுகள், சட்ட தொகுப்புகள், விதிகள் மற்றும் விதித் தொகுப்புகள், அரசு அலுவலகங்களின் தொலைபேசி கையேடுகள், அரசிதழ்கள் ஆகியவை அரசு அலுவலர்கள் / பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காக விற்பனை செய்யப்படுகிறது.

## 6. <u>பெயர் மாற்றம்</u>

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரக வளாகத்தில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் மற்றும் மதுரை, திருச்சி அரசு கிளை அச்சகங்களில் இயங்கி வரும் துணை விற்பனை நிலையங்களில், பெயர் மாற்றம் மற்றும் மதமாற்றத்தினால் ஏற்படும் பெயர் மாற்றம் மற்றும் அரசு அறிவிக்கைகள் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், பெயர் மாற்றம் தொடர்பான விண்ணப்ப படிவங்களை வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்தும் பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர்.

ஆங்கிலத்தில் பெயர் மாற்றம் செய்து அரசிதழில் வெளியீடு செய்ய ரூ.415/–ம், தமிழில் பெயர் மாற்றம் செய்து அரசிதழில் வெளியீடு செய்ய ரூ.115/–ம் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் 5 அரசிதழ் பிரதிகளுக்கான விலை மற்றும் அஞ்சல் செலவினமும் அடங்கும்.

கட்டணம் ஏதுமின்றி, மூன்றாம் பாலினத்தவர் பெயர் மாற்றம் குறித்து அரசிதழில் வெளியீடு செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டில் 25,536 எண்ணிக்கையில் ஆங்கில பெயர் மாற்றங்களும், 1,131 எண்ணிக்கையில் தமிழ் பெயர் மாற்றங்களும், 182 எண்ணிக்கையில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு பெயர் மாற்றங்களும், தமிழ்நாடு அரசிதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

2021–2022–ஆம் ஆண்டில் பெயர் மாற்ற விபரங்களை அரசிதழில் வெளியிட்டு, கட்டணமாக ரூ.1,07,47,544/–ம் (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து ஐநூற்று நாற்பத்து நான்கு), தனியார் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதன் மூலம் ரூ.14,10,146/–ம் (ரூபாய் பதினான்கு இலட்சத்து பத்தாயிரத்து நூற்றி நாற்பத்தாறு) ஆக மொத்தம் ரூ.1,21,57,690/–ம் (ரூபாய் ஒரு கோடியே இருபத்தோரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூற்று தொண்ணூறு) அரசிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 7. அரசு அச்சகங்களில், 2021–2022–ஆம் ஆண்டில் அரசுத் துறைகளுக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட பணிகளின் விவரம்

(i) நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் / பதிவேடுகள் / உறைகள்

| வ. எண். | துறை அலுவலகங்கள் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 1 | நிதித்துறை | 53,000 | 4,000 | – |
| 2 | நீதித்துறை | 7,30,000 | 39,095 | – |
| 3 | மாநில சட்டமன்றம் | 1,00,000 | – | – |
| 4 | காவல்துறை Pol –B. (FIR) | 22,55,400 | 3,83,596 | – |
| 5 | மருத்துவத்துறை | 30,05,750 | 1,76,145 | – |
| 6 | தொழில்நுட்ப கல்வி இயக்ககம் | 65,80,000 | 64,000 | – |
| 7 | கால்நடை பராமரிப்புத் துறை | – | 2,200 | – |

| வ. எண். | துறை அலுவலகங்கள் விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 8 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலத் துறை | 4,79,950 | – | – |
| 9 | ஆதிதிராவிடர் நலத் துறை | 17,84,693 | 3,786 | – |
| 10 | தடய அறிவியல் இயக்ககம் | 1,00,000 | – | – |
| 11 | வருவாய்த் துறை | 18,07,500 | – | – |
| 12 | அனைத்து துறைகளுக்கான பொதுப் படிவங்கள் | 12,66,032 | 4,59,100 | – |
| 13 | கல்வித்துறை படிவங்கள் | 34,00,000 | 10,000 | – |
| 14 | கருவூலப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் | 38,65,950 | 1,39,568 | – |
| 15 | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | 1,93,316 | 2,18,780 | 9,533 |

## (ii) நிலைப்படுத்தப்படாத படிவங்கள் / பதிவேடுகள் / உறைகள்

(அரசுத் துறைகளுக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட நிலைப்படுத்தப்படாத இனங்கள்)

| வ. எண். | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 1 | மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் அலுவலகங்களுக்கு தேவையான கடிதத்தாள் கற்றை, வாழ்த்து அட்டைகள் மற்றும் கோப்பு அட்டைகள் | 2,89,450 | – | 2,37,650 |
| 2 | சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகள், அறிவிப்புகள் மற்றும் மக்கள் சாசனம் | – | 1,20,020 | – |

| வ. எண். | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 3 | மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் நாட்குறிப்பேடுகள் | – | 1,900 | – |
| 4 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 1,51,700 | – | 25,000 |
| 5 | அரசு தேர்வுகள் துறை | 2,04,23,000 | 1,00,82,200 | 21,65,000 |
| 6 | ஊரகம் மற்றும் உள்ளாட்சித் தேர்தல் | 2,47,95,700 | 24,300 | 14,04,000 |
| 7 | தேர்தல் துறை | 1,42,95,000 | – | – |
| 8 | முன்னாள் படை வீரர் நலத்துறை இயக்ககம் | 1,63,150 | 75,464 | – |
| 9. | காவல் துறை | 1,58,060 | 20,225 | – |
| 10 | மருத்துவத் துறை | 3,68,900 | – | – |
| 11 | பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை | 1,54,700 | 1,850 | – |
| 12 | மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம் | 1,10,000 | 2,055 | – |

| வ. எண். | விவரம் | படிவங்களின் எண்ணிக்கை | புத்தகங்களின் எண்ணிக்கை | உறைகள் |
|---|---|---|---|---|
| 13 | குடும்ப நலம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை | 51,54,500 | – | – |
| 14 | கருவூலம் மற்றும் கணக்குத்துறை | – | 1,500 | – |
| 15 | பொது (தொலைபேசி)த் துறை | – | 6,000 | – |
| 16 | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | – | 3,000 | – |
| 17 | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | – | 1,300 | – |
| 18 | தடய அறிவியல் இயக்ககம் | 15,000 | – | 20,000 |
| 19 | தமிழ் வளர்ச்சித் துறை | – | 4.300 | – |

2021–22–ஆம் ஆண்டில் அரசுத் துறைகள், அரசுசார் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்காக, புத்தகங்கள் மற்றும்

சான்றிதழ்கள் ஆகியவை அச்சுக்கட்டணத்தின் அடிப்படையில் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

**<u>அச்சுக்கட்டணம் பெற்று செயலாக்கப்பட்ட</u>**

**<u>பணிகளின் விவரம்</u>**

| வ. எண். | துறை விவரம் | படிவங்கள்/ சான்றட்டைகள் எண்ணிக்கை | புத்தகங்கள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை பல்கலைக்கழகம் | – | 3,00,000 | – |
| 2. | அண்ணா பல்கலைக்கழகம் | – | 10,00,000 | – |
| 3. | இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை சென்னை–106 | – | 16,850 | – |
| 4. | கப்பல் போக்குவரத்து இயக்குநரகம், சென்னை–1 (விடைத்தாட்கள்) | – | 10,000 | – |

| வ. எண். | துறை விவரம் | படிவங்கள்/ சான்றட்டைகள் எண்ணிக்கை | புத்தகங்கள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 5. | விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்ககம், கோவை–13 | 17,81,000 | – | – |
| 6. | பதிவாளர், சென்னை உயர்நீதி மன்றம், சென்னை–104 | – | 2,000 | – |
| 7. | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 | – | 1,000 | – |
| 8. | இயல் இசை நாடக மன்றம், சென்னை–28 | – | 1,800 | – |
| 9. | எரிசக்தி மேம்பாட்டு முகமை, சென்னை–6 | – | 20 | – |
| 10. | சாலைப்போக்குவரத்து நிறுவனம், சென்னை–113 | – | 400 | – |

| வ. எண். | துறை விவரம் | படிவங்கள்/ சான்றட்டைகள் எண்ணிக்கை | புத்தகங்கள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 11. | மருத்துவக்கல்வி இயக்ககம், சென்னை–10 | – | 82,000 | 4,000 |
| 12. | இராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனை சென்னை–3 | 70,000 | – | 20,000 |
| 13. | தமிழ்நாடு கைவினை மேம்பாட்டு கழகம் | – | 40 | – |
| 14. | தமிழ்நாடு மகளிர் ஆணையம், சென்னை–5 | – | 5 | – |
| 15. | தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, சென்னை–8 | – | 1,450 | – |
| 16. | சேலம் விற்பனை குழு, சேலம் – 10 | – | 2,000 | – |
| 17. | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை–2 | 5 | – | – |

| வ. எண். | துறை விவரம் | படிவங்கள்/ சான்றட்டைகள் எண்ணிக்கை | புத்தகங்கள் | உறைகள் |
|---|---|---|---|---|
| 18. | மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமுலாக்கம் | – | 15,000 | – |
| 19. | காவல் துறை பயிற்சி கல்லூரி, அசோக்நகர் | – | 23,980 | – |

**<u>2021–2022–ஆம் ஆண்டில் பல்கலைக்கழகப் பணிகளின் மூலம் ஈட்டப்பட்ட வருவாய்</u>**

| வ. எண். | விவரம் | ஈட்டப்பட்ட வருவாய் ரூ. |
|---|---|---|
| 1 | சென்னை பல்கலைக்கழக விடைத்தாட்கள் | 42,21,043/– |
| 2 | அண்ணா பல்கலைக்கழக விடைத்தாட்கள் | 53,28,324/– |
| 3 | தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகம் | 94,500/– |
| | **மொத்தம்** | 96,43,867/– |

**2021 மே மாதம் முதல் 2022 மார்ச் மாதம் வரை அரசுத் துறைகளிடமிருந்து பெறப்பட்ட அச்சுக்கட்டண விவரம் (Including GST)**

| வ. எண். | துறை விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித்துறை, சென்னை–105 | 68,06,281/– |
| 2 | கப்பல் போக்குவரத்து இயக்குநரகம், சென்னை–1 | 1,26,753/– |
| 3 | விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்ககம், கோவை–13 | 23,20,727/– |
| 4 | சென்னை உயர்நீதிமன்றம் , சென்னை–104 | 9,34,219/– |
| 5 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 | 2,42,063/– |
| 6 | இயல் இசை நாடக மன்றம், சென்னை–28 | 1,42,827/– |
| 7 | எரிசக்தி மேம்பாட்டு முகமை, சென்னை–6 | 3,207/– |

| வ. எண். | துறை விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 8 | சாலைப்போக்குவரத்து நிறுவனம், சென்னை –113 | 27,978/– |
| 9 | மருத்துவக்கல்வி இயக்ககம், சென்னை–10 | 12,22,953/– |
| 10 | இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை–3 | 4,77,647/– |
| 11 | தமிழ்நாடு கைவினை மேம்பாட்டு கழகம், சென்னை–2 | 6,719/– |
| 12 | தமிழ்நாடு மகளிர் ஆணையம், சென்னை–5 | 2,456/– |
| 13 | தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, சென்னை–8 | 2,20,009/– |
| 14 | சேலம் விற்பனைக் குழு, சேலம்–10 | 1,52,377/– |
| 15 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை–2 | 438/– |
| 16 | சாலை போக்குவரத்துத் துறை | 31,901/– |
| 17 | மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம் | 76,819/– |
| | மொத்தம் | 1,27,95,374/– |

## 8. தொழிலாளர்களின் நலன்

அரசு அச்சகங்கள், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாகும். எனவே, தொழிலாளர் துறையிலிருந்து உதவி ஆணையர் நிலையில் ஒரு தொழிலாளர் நல அலுவலர், தொழிலாளர் துணை ஆய்வாளர் ஒருவர் மற்றும் தொழிலாளர் உதவி ஆய்வாளர் நிலையில் ஒருவர் என இரு உதவித் தொழிலாளர் நல அலுவலர்களும் தொழிலாளர் நலனை பேணிக் காத்திட மாற்றுப்பணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறையிலிருந்து ஒரு சுகாதார ஆய்வாளரும் மாற்றுப்பணியில் நியமிக்கப்பட்டு சென்னை அலகுகளின் சுகாதாரம் பேணப்படுகிறது.

### அ) அச்சகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள்

(i) அச்சகங்களில் 2/3 முறை மாற்றங்களில் (shifts) பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்களது பணித்தன்மை காரணமாகவும், அவர்களை

ஊக்குவிக்கவும் பல்வேறு படிகள் வழங்கப்படுகின்றன.

| வ. எண். | படிகள் விவரம் | தொகை விவரம் |
|---|---|---|
| 1 | இரவு நேரப்படி | நாள் ஒன்றுக்கு ரூ.50/– |
| 2 | சலவைப்படி | மாதம் ஒன்றுக்கு ரூ.200/– |
| 3 | வார ஈட்டுப்படி | மாதம் ஒன்றுக்கு ரூ.400/– |
| 4 | இடர்படி | மாதம் ஒன்றுக்கு ரூ.400/– |
| 5 | சிற்றுண்டிப்படி | மாதம் ஒன்றுக்கு ரூ.400/– |
| 6 | சீருடை – ஆண் பணியாளர்கள் | நான்கு இணை ஆடைகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை) தையற்கூலி ரூ.1,200/– |
| | பெண் பணியாளர்கள் | இரண்டு ஊதாநிற மேலங்கிகள் (ஒவ்வொரு ஆண்டும்) தையற் கூலி – ரூ.700/– |

## (ii) <u>சிறப்பூதியம்</u>

வரவு–செலவு திட்டம் மற்றும் அதிரகசிய பிரிவில் ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை தினங்களிலும், நெருக்கடியான சூழ்நிலைகளிலும்

முக்கியத்துவம் வாய்ந்த அச்சுப்பணிகளை பணியாளர்கள் மேற்கொள்வதால் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக கீழ்க்காணும் அட்டவணையில் கண்டவாறு சிறப்பூதியம் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>படிகள் விவரம்</th><th>மாதந்தோறும் வழங்கப்படும் சிறப்பூதியம்</th></tr>
<tr><td>1</td><td>முதுநிலை முதலாள்</td><td>ரூ.300/-</td></tr>
<tr><td>2</td><td>தலைமை முதுநிலை முதலாள்</td><td>ரூ.240/-</td></tr>
<tr><td>3</td><td>ஒழுங்கமைப்பாளர்</td><td rowspan="4">ரூ.210/-</td></tr>
<tr><td>4</td><td>இளநிலை முதலாள்</td></tr>
<tr><td>5</td><td>முதுநிலை தனியச்சு வார்ப்புப் பணியாளர்</td></tr>
<tr><td>6</td><td>இளநிலை வாசகர்</td></tr>
<tr><td>7</td><td>இளநிலை புத்தகம் கட்டுநர்</td><td rowspan="3">ரூ.180/-</td></tr>
<tr><td>8</td><td>இயந்திர இயக்கி</td></tr>
<tr><td>9</td><td>அசல் படிப்பவர்</td></tr>
<tr><td>10</td><td>கிடங்கு எழுத்தர்</td><td>ரூ.120/-</td></tr>
</table>

## ஆ) மனமகிழ் மன்றங்கள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கிடையே நல்லிணக்கத்தை உருவாக்கவும், அவர்களது மனச்சோர்வினை களையவும், உடல்நலம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், யோகா பயிற்சி, கலந்துரையாடல் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் மனமகிழ் மன்றங்கள் வாயிலாக நடத்தப்பட்டு வருகின்றன.

மனமகிழ் மன்றத்திற்கென அரசு வழங்கி வந்த நிதி ரூ.45,000/− (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம்), 2007−ஆம் ஆண்டில் ரூ.1,00,000/− (ரூபாய் ஒரு இலட்சம்) ஆகவும், 2013−ஆம் ஆண்டு முதல் ரூ.3,00,000/− (ரூபாய் மூன்று இலட்சம்) ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்தொகை விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், பரிசுப்பொருட்கள் வழங்கவும், உடற்பயிற்சி சாதனங்கள் கொள்முதல் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

## இ) தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர்கள் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் செயல்பாடுகள்

எழுதுபொருள் அச்சுத்துறையில், ஆணையரகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களிடையே சேமிப்பு மனப்பான்மையை வளர்த்திட தொடர் வைப்புத்திட்டம் மற்றும் காலவைப்புத் திட்டங்களை கூட்டுறவு நாணயச் சங்கங்கள் செயல்படுத்துகின்றன. உறுப்பினர்களுக்கு அதிகபட்சமாக ரூ.12,00,000/− (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம்) வரை கடனுதவி வழங்கப்படுகிறது.

மேலும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ்மொழியை ஒரு பாடமாகக் கொண்டு அதிக மதிப்பெண்கள் பெற்று தரவரிசைப்படி முதல் மூன்று இடங்களைப் பெறும் சங்க உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அரசு மைய அச்சகத்தில் "எ" வகை கூட்டுறவு நாணயச்சங்கமும் மற்ற 5 கிளை அச்சகங்களில் "பி" வகை கூட்டுறவு நாணயச் சங்கங்களும் செயல்படுகின்றன.

அரசு மைய அச்சகத்தில் செயல்படும் கூட்டுறவு நாணயச்சங்கம் துவங்கி 99 ஆண்டுகள் நிறைவடைகிறது. இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ள பணியாளர் தனது பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நிலையில், அவர் சங்கத்தில் பெற்ற கடன் தொகை முழுமையாக தள்ளுபடி செய்யப்படுவதுடன், அப்பணியாளரின் குடும்பத்தாருக்கு ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம்) ஈமச்சடங்கிற்காக வழங்கப்பட்டு வருகிறது.

**ஈ) கூட்டுறவு பண்டகசாலை**

சென்னை அரசு மைய அச்சக வளாகத்தில், தொழிலாளர் மற்றும் ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் நியாய விலையில் உணவுப் பொருட்கள் பெற்று

பயனடைய 1965–ஆம் ஆண்டு முதல் ஒரு கூட்டுறவு பண்டகசாலை இயங்கி வருகிறது.

**<u>உ) அரசு அச்சக குடியிருப்பு</u>**

தண்டையார் பேட்டை, காமராஜர் நகரில் அரசு அச்சக பணியாளர்களுக்கான குடியிருப்பு 14.01.1959 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு 3639 சதுர மீட்டர் பரப்பளவில் 104 "எ" வகை குடியிருப்புகள், 4166 சதுர மீட்டர் பரப்பளவில் 96 "பி" வகை குடியிருப்புகள் மற்றும் 6210 சதுர மீட்டர் பரப்பளவில் 100 "சி" வகை குடியிருப்புகள் ஆக மொத்தம் 14,015 சதுர மீட்டர் பரப்பளவில் 300 குடியிருப்புகள் கட்டப்பட்டு, 01.04.1962 அன்று பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதில் "பி" வகை 96 குடியிருப்புகள் அமைந்திருந்த 4166 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தினை 30.09.2015 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.439 உயர் கல்வி (ஜி–1)த் துறை மூலம் உயர்

கல்வித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு, 2015–2016–ஆம் கல்வியாண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (இருபாலர்) மற்றும் அரசு தொழில்நுட்ப கல்லூரி (இருபாலர்) செயல்பட்டு வருகின்றன.

நிலமாற்றம் செய்யப்பட்ட "பி" வகை குடியிருப்பில் வசித்த பணியாளர்களது விருப்பத்தின் அடிப்படையில் "எ" மற்றும் "சி" வகை குடியிருப்புகளுக்கு மாற்றம் செய்யப்பட்டு தற்போது "எ" வகை குடியிருப்பில் 38 வாடகை குடியிருப்புதாரர்களும், "சி" வகை குடியிருப்பில் 58 வாடகை குடியிருப்புதாரர்களும் வசித்து வருகின்றனர்.

இக்குடியிருப்பு கட்டப்பட்டு கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் கடந்த நிலையில், "எ" மற்றும் "சி" வகையில் உள்ள 204 வீடுகளின் மேற்கூரைகள் சிதிலமடைந்து மிகவும் பழுதடைந்த நிலையில், சுற்றுச்சுவர்கள் இடிந்து விழும் நிலையிலும், சீரற்றும்,

குடியிருக்க தகுதியற்று உள்ளதால், "எ" மற்றும் "சி" வகை குடியிருப்புகளை முழுவதுமாக இடித்துவிட்டு, நவீன வசதிகளுடன் கூடிய புதிய குடியிருப்புகளாக கட்டுவதற்கு அனுமதி கோரி அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

## 9. <u>பணி நியமனங்கள்</u>

அ) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செய்தித்தாள் விளம்பரங்கள், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடி நியமனம் மற்றும் கருணை அடிப்படையில் நியமனம் ஆகியவற்றின் மூலம் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

2021–22–ஆம் ஆண்டில் 6 பணியாளர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## <u>ஆ) வெளி ஆதாரம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள்</u>

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் தற்போது 33 விழுக்காடு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிவதால், அவசரம் மற்றும் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, அனைத்து அரசு அச்சகங்களிலும் வெளி ஆதார முறையில் ஒப்பந்த அடிப்படையில், புத்தகம் கட்டுநர்கள், ஓட்டுநர்கள், மஸ்தூர்கள், சுகாதாரப் பணியாளர்கள், காவலர்கள் என மொத்தம் 200 ஒப்பந்தப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## 10. வரவு – செலவு

2021–2022–ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு மற்றும் 2022–23–ஆம் ஆண்டிற்கான திட்டமதிப்பீடு விவரங்கள்:

| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | | |
|---|---|---|---|---|---|
| கணக்குத் தலைப்பு | | 2021–2022–ஆம் ஆண்டு வரவு–செலவு மதிப்பீடு (B.E) | 2021–2022 –ஆம் ஆண்டு வரவு–செலவு திருத்திய மதிப்பீடு (R.E) | 2021–2022 –ஆம் ஆண்டு இறுதி திருத்திய நிதி ஒதுக்கீடு (FMA) | 2022–2023–ஆம் ஆண்டு வரவு – செலவு திட்ட மதிப்பீடு (B.E) |
| 2058 | எழுது பொருள் மற்றும் அச்சு | 148,21,74 | 143,76,18 | 133,33,41 | 162,09,04 |
| 2059 | பொதுப் பணிகள் | 60,00 | 49,99 | 60,00 | 49,99 |
| 4058 | எழுது பொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு | 5 | 5,29,75 | 4,25,49 | 94,04 |
| | **மொத்தம்** | **148,81,79** | **149,55,92** | **138,18,90** | **163,53,07** |

## 11. <u>கட்டட பராமரிப்பு</u>

பழுதடைந்துள்ள அரசு மைய அச்சகத்தில் பிரதான அச்சு இயந்திரம் அமைந்துள்ள கட்டடம், சேலம் அரசு கிளை அச்சக கட்டடம், திருச்சி அரசு கிளை அச்சகக் கட்டடம், மதுரை அரசு கிளை அச்சகக் கட்டடம் மற்றும் விருத்தாச்சலம் அரசு கிளை அச்சகக் கட்டடம் ஆகியவற்றை புனரமைக்க 2021–22–ஆம் நிதியாண்டில் ரூ.4.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப் பணித் துறை மூலம் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 12. <u>கழித்தொதுக்கம்</u>

சென்னை அரசு மைய அச்சகம் மற்றும் அரசு கிளை அச்சகங்களில், தனி அச்சுவார்ப்பு எழுத்துகளும், ஈயக்கலவை வார்ப்பு அச்சுக்கோர்க்கும் முறையும் வழக்கத்தில் இருந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட உலோகங்கள் மற்றும் உலோகம்சார் பொருட்கள், தற்போது வழக்கொழிந்த காரணத்தினால் பெருமளவில் பல வருடங்களாக அச்சகங்களில்

இருப்பில் உள்ளன. இவற்றை மின்–ஏலம் (e–auction) மூலம் ஒன்றிய அரசு சார் நிறுவனமான உலோகக் கழிவுகள் வர்த்தக நிறுவனம் (M/S Metal Scrap Trade Corporation, Chennai) மூலம் கழித்தொதுக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 13. <u>தகவல் பரவலாக்கம்</u>

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கென http://www.stationeryprinting.tn.gov.in எனும் இணைய வலைத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெயர் மாற்றம் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள், தமிழ்நாடு அரசிதழ்கள், அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவனச் சரிவு நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள் ஆகியன அச்சிடப்பட்டு இத்துறையின் வலைத்தளத்தில் காலதாமதமின்றி பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

பொதுமக்களுக்கு தேவைப்படும் பெயர் மாற்றம் குறித்த விவரங்கள் வலைத்தளம் மூலம்

உடனுக்குடன் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## நிறைவுரை


உலகமெங்கும் அதிகார மையங்கள் உருவாகி, அடக்குமுறைகள் எளிய மக்கள் மீது ஏவப்பட்ட போது, உலகின் அனைத்து சமுதாய, பொருளாதார மற்றும் கலாச்சார புரட்சிகளின் அடிநாதமாக மக்களிடத்தில் மேலோங்கியிருந்த சுதந்திரம், சமத்துவம் என்ற இரு குறிக்கோள்களே வலிமையான உணர்வுகளாகவும், எண்ணங்களாகவும் உருமாறி, எழுத்துக்களாக வடித்த நிலையில், அவை பரிமாற்றத்திற்கான பெரிய இயந்திரமாக இருந்தது அச்சும், அச்சகமும். தகவல் பரிமாற்றத்தினை எளிதாகவும், விரைவாகவும் மாற்றிய அச்சகம், சுதந்திரம், சமத்துவம், பகுத்தறிவு, பொதுஉடமை மற்றும் தேசியம் என உலகமெங்கும் மனித சமுதாயத்தின் நாகரீக, அறிவுசார் பரிணாம வளர்ச்சியின் பல படிகளில் முக்கிய பங்காற்றியது. தமிழகத்தில் இத்தகைய பெருமைசார் அச்சகம்

எளிமையாக துவங்கப்பட்டு, 190 ஆண்டுகள் பழமையுடன், இன்றைய எண்ணிம முறையிலான தொழில்நுட்ப வளர்ச்சியிலும் தன்னை மெருகேற்றி அரசுத் துறைகளின் அச்சுத் தேவைகளை விரைவாகவும், செவ்வையாகவும் நிறைவேற்றுகிறது. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை பழமை வாய்ந்ததாக இருப்பினும் தொழில்நுட்ப வளர்ச்சியின் புதுமைகளை தனதாக்கி, தனது பயணத்தை பெருமையுடன் தொடர்கிறது.

**மு.பெ.சாமிநாதன்,**
**செய்தித் துறை அமைச்சர்.**

# எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

## நிருவாக அமைப்பு



## இணைப்பு – ஆ

## பணிபுரிவோர் எண்ணிக்கை

| வ.எண். | அலகு | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | தொழில்நுட்ப பணியாளர்கள் | இதர பிரிவு | மொத்தப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஆணையரகம் (அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உட்பட) | 15 | 128 | 19 | 46 | 208 |
| 2 | அரசு மைய அச்சகம், சென்னை–1 | 25 | 103 | 448 | 93 | 669 |
| 3 | அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1 | 1 | 41 | 17 | 18 | 77 |

| வ.எண். | அலகு | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | தொழில்நுட்ப பணியாளர்கள் | இதர பிரிவு | மொத்தப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 4 | அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–104 | 1 | 8 | 46 | 9 | 64 |
| 5 | அரசு கிளை அச்சகம், மதுரை –7 | 5 | 24 | 162 | 12 | 203 |
| 6 | அரசு கிளை அச்சகம், சேலம் | 1 | 21 | 77 | 8 | 107 |
| 7 | அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை | 1 | 14 | 59 | 8 | 82 |
| 8 | அரசு கிளை அச்ச்கம், திருச்சிராப்பள்ளி | 1 | 17 | 69 | 8 | 95 |
| 9 | அரசு கிளை அச்சகம், விருத்தாசலம் | 2 | 12 | 68 | 9 | 91 |

| வ.எண். | அலகு | அலுவலர்கள் | அமைச்சுப் பணியாளர்கள் | தொழில்நுட்ப பணியாளர்கள் | இதர பிரிவு | மொத்தப் பணியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 10 | அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை–23 | 0 | 6 | 19 | 4 | 29 |
| | **மொத்தம்** | 52 | 374 | 984 | 215 | 1625 |



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள் 11.12.2021 அன்று, எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த பணியாளர்களின் 4 வாரிசுதாரரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி. ஆ. சுகந்தி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள் 23.03.2022 அன்று அரசு மைய அச்சக பயன்பாட்டிற்கு ரூ.18,00,000/- மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்ட புதிய சுமையூர்தியின் சாவியை ஊர்தி ஓட்டுநரிடம் வழங்கினார். இந்த நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர், திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி. ஆ. சுகந்தி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

J



பிரதான கட்டடம், அரசு மைய அச்சகம், சென்னை-1



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள், அரசு மைய அச்சகத்தில் உள்ள நான்கு வண்ண கணினி வழி தனித்தாள் அச்சு இயந்திரத்தைப் பார்வையிட்டார்.



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள், அரசு மைய அச்சகத்தில்
உள்ள புத்தகம் கட்டும் இயந்திரத்தைப் பார்வையிட்டார்.




புத்தகம் கட்டும் இயந்திரம், அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்.



இரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம், அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

D




காகிதம் வெட்டும் இயந்திரம், அரசு கிளை அச்சகம், சேலம்.



இரு வண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம், அரசு கிளை அச்சகம், மதுரை-7.




தனித்தாள் அச்சு இயந்திரம், அரசு கிளை அச்சகம், திருச்சி.

காலம் உணர்ந்து அதற்கேற்பச்
செயல்படுதல், அந்த நற்செயலின்
வெற்றியை நழுவ விடாமல்
கட்டிப்பிணைக்கும் கயிறாக அமையும்.

– முத்தமிழறிஞர் **கலைஞர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.